ஸ்ரீ

# நூற்றெட்டுத்திருப்பதியகவல்.

உலகுயரரங்கமுறையூர்தஞ்சை
அன்பில்கரம்பனூராதனூர்வெள்ளறை
கண்டியூரழுந்தூர்கவித்தலம்புள்ளம்
பூதங்குடிசிறுபுலியூர்குடந்தை
திருவிண்ணகரந்திருத்தலைச்சங்க
நாண்மதியந்திருப்பேர்நகர்திருச்சேறை
வெள்ளியங்குடியரிமேயவிண்ணகரம்
வண்புருடோத்தமமாலிநறையூர்
சித்திரகூடஞ்சீராமவிண்ணகரம்
காவளம்பாடிகண்ணமங்கை
நந்திபுரவிண்ணகரநாகையிந்தளூர்
கண்ணங்குடிதிருக்கண்ணபுரமணி
மாடக்கோயில்வைகுந்தவிண்ணகரம்
கூடலூர்வெள்ளக்குளமணிக்கூடம்
தேவனார்தொகைதிருத்தெற்றியம்பலம்
செம்பொன்செய்கோயில்திருப்பார்த்தன்பள்ளி
சோழநாட்டிடைமறைசொற்பதிநாற்பதின்
மாலிருஞ்சோலைவரகுணமங்கை
புல்லாணிமெய்யம்புளிங்குடிமோகூர்
குருகூர்கோட்டிகூடல்வைகுந்தம்
குளந்தைகுறுங்குடிகோளூர்புதுவை
தொலைவில்லிமங்கலந்தாய்த்திருப்பேரை
சீவரமங்கைதிருத்தண்காலூர்
பாண்டிநாட்டிடைவாழ்பதிபதினெட்டின்
போற்றுமனந்தபுரம்புலியூர்செங்
குன்றூர்வித்துவக்கோடுமூழிக்
களம்வண்பரிசாரங்காட்கரைநாவாய்
வாறன்விளைவண்வண்டூர்வல்லவாழ்
திருக்கடித்தானந்திருவாட்டாறு
பகர்மலைநாட்டிடைப்பதிபதின்மூன்றின்

திருவகீந்திரபுரந்திருக்கோவலூர்நடு
நாட்டிடையிரண்டுநலந்தருபதியின்
அத்திமாமலையூரகந்திருத்தண்கா
புட்குழியட்டபுயங்கநீரகம்
காரகம்வெஃகாகள்வனூர்பாடகம்
நின்றவூரெவ்வுளூர்நிலாத்திங்கட்டுண்டம்
திருவேளுக்கைதிருக்கார்வானம்
பவளவண்ணம்பரமேச்சுரவிண்ணகரம்
திருவிடவெந்தைதிருக்கடன்மல்லை
அல்லிக்கேணிவளர்திருக்கடிகை
நீர்மலைதொண்டைநெடுநாட்டிடையின்
இன்புறும்பதிகளிருபத்திரண்டின்
வேங்கடஞ்சிங்கவேள்குன்றமயோத்தி
தேங்கியவதரியாச்சிரமநைமி
சாரணியம்பிரிதிசாளக்கிராமம்
கங்கைக்கரைவாழ்கண்டந்திருவாய்ப்
பாடிதுவாரகைபாற்கடல்மதுரை
வடநாட்டிடையின்மன்னியபதிகள்
பத்துடனிரண்டிற்பரமபதமெனுந்
திருநாடொன்றிற்சேர்த்துநூற்றெட்டில்
யதிபதியருளாலியற்றியதிருநா
ராயணபுரந்திருராசமன்னார்கோயில்
மன்னியவிருந்தாவனம்பெரும்பூதூர்
மெய்ப்புகழ்ப்பாபவிநாசஞ்சீர்முட்டம்
புராணநூற்றலங்கள்போற்றுமோராறின்
உலகிடைமற்றுளவோங்கியபதியின்
மலர்மகளுடனேமன்னியதிருமால்
ஏழையேனுளத்திலிருந்திவ்
கூழியினழியாவுலகளித்திடவே.

நூற்றெட்டுத்திருப்பதியகவல் முற்றிற்று.